அளிக்கவும், மற்றவர்களுடைய உடைகளைத் தனியாக சுகாதார முறைப்படி வெளுத்து அளிக்கவும் தக்க ஏற்பாடுகள் செய்யப் படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : என்னுடைய பதிலில் நான் அதைத்தான் சொன்னேன். "சொறி, சிரங்கு முதலியவற்றை பரவ விடாமல் தடுக்கும் பொருட்டு, அவற்றால் பாதிக்கப்படவர்கள் மற்றவர்களிட மிருந்து தனியே பிரித்து வைக்கப்பட்டனர். அவர்களுடைய உடைகளைக் கிருமி கொல்லி சோப்புக்களைக் கொண்டு அன்றாடம் தூய்மைப்படுத்தும்படி அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது". கனம் அங்கத்தினர் சொல்கிற ஏற்பாடுகள் அமலில் இருக்கின்றன.

திரு. சு. சின்னையன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த
11-00 a.m. மாதிரி சொறி, சிரங்குகளை அகற்றுவதற்கு அங்கங்கே இருக்கிற சர்க்கார் மருத்துவ மனைகளிலே இருக்கிற டாக்டர்கள் ஹாஸ்டல் களுக்கு வாரத்திற்கு ஒரு முறையாவது சென்று பார்த்து வருகின்ற ஏற்பாடுகளைச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : நான் முன்னமேயே சொன்னேன், பெரிய விடுதிகளுக்குச் சென்று கவனிப்பதற்கு ஒரு சில டாக்டர் கள் சென்றால் அவர்களுக்கு அதற்காக அலவன்ஸ் கொடுப்பதற்கு அரசாங்கம் பரிசிலனை செய்யுமென்று. ஆனால் எல்லா விடுதிகளுக் கும் இந்த ஏற்பாட்டைச் செய்ய முடியாது.

தமிழகத்தில் கால்நடைப் பண்ணை

* 8. கேள்வி.—திரு. ம. கமலநாதன் :
திரு. எஸ். ஜே. ராமசாமி : } கனம் உள்துறை அமைச்சர் 4-11-1965-ல் கேள்வி எண் 273-க்கு அளித்த பதிலை யொட்டி தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

இந்திய சர்க்காரால், தமிழகத்தில் ஒரு கால் நடைப் பண்ணை நிறுவும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது ?

கனம் திரு. பூ. கக்கன் : மாட்டுப் பண்ணையை அமைப்பதற் காக இந்திய அரசுக்கு, ஸ்ரீபெரும்புதூர் தாலுகாவைச் சேர்ந்த மன்னூர் கிராமத்திலுள்ள ஓர் இடம் குறிப்பிடப்பட்டது. மத்திய அரசின் குழு ஒன்று அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு ஆய்வு நடத்தியது. அந்த இடம் குறித்து மேற்கொண்டும் சில விவரங்களை அக்குழு கேட்டுள்ளது. அவை இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : மத்திய அரசு இந்தப் பண்ணைக்கு எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறது என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : எஸ்டிமேட்டட் அமௌண்ட் 50 லட்சம் ரூபாய்.

1st August 1966]

திரு. ம. கமலநாதன் : தலைவரவர்களே, ஊட்டியிலே நடைபெறும் கால்நடைப் பண்ணையிலே கால்நடைகள் இறந்து கொண்டே வருகின்ற சூழ்நிலையில் இப்படிப்பட்ட பண்ணைகளை ஏற்படுத்துவதற்கு முன்பு ஸ்ரீபெரும்புதூர் மட்டுமல்ல, மற்ற இடங்களும் சரியான இடங்களா என்பதை எல்லாம் அரசாங்கம் ஆராய்ந்து முடிவெடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : மத்திய சர்க்காரிலேயிருந்து சில நிபுணர்கள் வந்து பார்த்து தகுதியான இடமாக இருந்தால்தான் வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல் : கால்நடைப் பண்ணைக்காக 50 லட்ச ரூபாய் அளவில் தேசியத் திட்டம் போன்று செய்யப்படுகிற திட்டத்தில் இதற்காக மேய்ச்சல் நிலம் ஏராளமாக இருக்க வேண்டும். ஸ்ரீ பெரும்புதூரில் மேய்ச்சல் நிலம் ஏராளமாக இருக்கிறதா என்பது ஆராயப்பட்டதா ? மேய்ச்சல் நிலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏராளமாக இருக்கிறது. அங்கேயும் இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : புறம்போக்கு இடங்கள், பாரஸ்ட் இடங்கள், மேலும் தனிப்பட்ட அன்பர்கள் மூலம் சுமார் ஆயிரம் ஏக்கர்கள் வரலாம். இவற்றை வைத்துத்தான் அந்த இடத்தில் இதை வைக்கலாமா என்பது பரிசிலிக்கப்படுகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : கால் நடைப் பண்ணை கோவை மாவட்டத்தில் காங்கேயம், செட்டிநாடு அல்லது ஒரத்தநாடு பகுதிகளிலே ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் பரிசிலனை செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : செட்டிநாட்டிலே ஒரு கால்நடைப் பண்ணை இருக்கிறது. ஏற்கனவே கோயம்புத்தூர் ஜில்லாவில் பவானி சாகர் பகுதியைப் பார்த்திருக்கிறார்கள். நிபுணர்கள் வந்து பார்த்து எந்த இடத்திலே வைக்கலாம் என்று கூறுகிறார்களோ அந்த இடத்தில்தான் வைக்கலாம்.

Cattle Insurance Scheme

*9. *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state, with reference to the answer given to Question No. 275 on 4th November 1965 :—

(*a*) whether the Cattle Insurance Scheme has been introduced in the State; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) இம்மாநிலத்தில் இத்திட்டம் இன்னும் செயல்படுத்தப்படவில்லை. முன்னோடி நடவடிக்கையாக இன்ஷூர் செய்யத்தக்க வயதுள்ள மாடுகள், எருமைகள் இவற்றின் மரண விவரம் பற்றி குறிப்பிட்ட பகுதிகளில் புள்ளி விவரம் சேகரித்து சர்வே ஒன்றை இந்திய அரசு நடத்தத் திட்டமிட்டுள்ளது. இன்ஷூரன்ஸ் பிரிமியம் விதங்களையும், இழப்பீடு விவரங்களையும் கணக்கிடுவதே இந்த சர்வேயின் நோக்கமாகும்.